# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>M.C.O.P. No.297/2023</u>

RW–1 ராஜ்குமார் நாள்.13.11.2025

<u>**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**</u>:

நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஓரளவு எழுத, படிக்க தெரியும். நிருபணவாக்குமூலம் தயார் செய்ய நான் தான் விவரம் சொன்னேன். என்னுடைய நிருபணவாக்குமூலத்தில் இறந்துபோனவர் ரோட்டின் இடதுபுறமாக நடந்துசென்றதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் அவர் தான் குறுக்கே வந்துவிட்டார். விபத்து சம்மந்தமாக என்மீது முதல்தகவல்அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பொய்யாக என்மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நான் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் என்னுடைய வாகனத்தை ஓட்டிசென்று இறந்துபோனவர் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல. என்மீது பதிவுசெய்யப்பட்ட குற்றவழக்கு நிலுவையில் உள்ளது என்றால்சரிதான். விபத்திற்கு நான் தான் காரணம் என்பதால் மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u>

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.